அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

# பொதுத்தேர்வு மாதிரித்தேர்வுத்தாள்

# தமிழ்

# ஆண்டு 4

| | |
|---|---|
| **நேரம்: 120 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்: 12** |
| **சுட்டெண்:** | |

## பகுதி – 1

**1. பொருத்தமான விடையின் முன் புள்ளடி இடுக.**

1. இயல், இசை, நாடகம் என்பன
   - ☐ முத்தமிழ் ☐ முக்கனி ☐ முப்பால்

2. வானொலியைக் கண்டுபிடித்தவர்
   - ☐ சாமுவேல் மோர்சு ☐ கிரகம்பெல் ☐ மார்க்கோனி

3. 'தமிழுக்கு அமுதென்று பேர்…' என்று பாடியவர்
   - ☐ பாரதியார் ☐ பாரதிதாசன் ☐ ஔவையார்

4. நாம் கற்குந்தோறும் கல்வியறிவு
   - ☐ குறையும் ☐ பெருகும் ☐ அருகும்

5. தோழனுக்குத் தோழி போல மாணவனுக்கு
   - ☐ மாணவர் ☐ மாணவி ☐ மாணவன்

6. பொருளின் பெயரைக் குறிக்கும் சொல்
   - ☐ பெயர்ச்சொல் ☐ வினைச்சொல் ☐ இடைச்சொல்

7. 300 என்பதன் எழுத்து வடிவம்
   - ☐ முன்னூறு ☐ முந்நூறு ☐ முந்னூறு

8. உயிர்க் குற்றெழுத்துகளின் எண்ணிக்கை
   - ☐ ஐந்து ☐ ஏழு ☐ பன்னிரண்டு

9. அவர்கள் என்பது
   - ☐ தன்மை ☐ முன்னிலை ☐ படர்க்கை

10. நரி ஊளையிடும் அதுபோல குதிரை
    - ☐ கத்தும் ☐ உறுமும் ☐ கனைக்கும்

11. ஓவியம் என்பதன் ஒத்தபொருட்சொல்
    - ☐ சிற்பம் ☐ சித்திரம் ☐ இசை

12. மழை + காட்சி என்பதன் சொற்சேர்ப்பு வடிவம்
    - ☐ மழைகாட்சி ☐ மழைக்காட்சி ☐ மழைட்காட்சி

13. இன்பம் என்பதன் எதிர்ப்பொருட்சொல்

☐ மகிழ்ச்சி ☐ துன்பம் ☐ களிப்பு

14. ஆடி முதல்நாள் கொண்டாடப்படுவது

☐ தைப்பொங்கல் ☐ ஆடிப்பிறப்பு ☐ தீபாவளி

15. நீலவானம் என்பதன் சொற்பிரிப்பு வடிவம்

☐ நீல + வானம் ☐ நிலா + வானம் ☐ நீலம் + வானம்

(15X1=15 புள்ளிகள்)

## 2. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொல்லியம் ஆக்குக.

1. பரந்து / தமிழர்கள் / வாழ்கிறார்கள் / உலகெங்கும்

_______________________________________________

2. ஒழுக்கமுடன் / மாணவர்கள் / வேண்டும் / வாழ

_______________________________________________

3. உண்மை / தரும் / உயர்வைத் / என்றும்

_______________________________________________

4. விழாக்களை / தமிழர்கள் / கொண்டாடுவர் / விரும்பிக்

_______________________________________________

5. பள்ளியில் / போட்டி / எங்கள் / தமிழ்த்திறன் / நடைபெற்றது

_______________________________________________

(5X2=10 புள்ளிகள்)

**3. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

| | | |
|---|---|---|
| சலசல | விடியவிடிய | இப்பொழுது |
| ஒவ்வொன்றும் | மென்மையாக | |

1. திருக்குறள் ________________________ நல்ல கருத்தினைக் கூறுகின்றது.
2. ஈழத்தில் கூத்துகள் ________________________ நடைபெறும்.
3. ________________________ பொதுத்தேர்வு நடைபெறுகிறது.
4. ஆற்றுநீர் ________________________ என ஓடியது.
5. பூக்களின் இதழ்கள் ________________________ இருந்தன.

(5X1=5 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் சொற்களைத் தமிழ்மொழியில் எழுதுக.**

(5X1=5 புள்ளிகள்)

**5. பொருத்தமாக எழுதுக.**

1. குயிலி ________________________ நடந்து சென்றாள். (கடை + கு)
2. ஆசிரியர் ________________________ அழைத்தார். (மாணவன் + ஐ)
3. பறவைகள் ________________________ இருக்கின்றன. (மரம் + இல்)
4. தைப்பொங்கல் ________________________ திருநாள் ஆகும். (தமிழர் + இன்)
(5X1=5 புள்ளிகள்)
5. ஆத்திசூடி ________________________ இயற்றப்பட்டது. (ஔவையார் + ஆல்)
6. நான் ________________________ நூலகத்திற்குச் சென்றேன்.
(நண்பன் + ஒடு)

(6X1=6 புள்ளிகள்)

**6. வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டோர் யாவர்?

2. ஈழத்தின் மிக நீளமான ஆறு எது?

3. யாழ் பற்றிய செய்திகளைக் கூறும் நூல் எது?

4. நடுகல் வழிபாடு யாருக்காக நடத்தப்படுகிறது?

5. இரண்டு திணைகளையும் எழுதுக.

6. வினாச்சொற்கள் இரண்டு எழுதுக.

(6X2=12 புள்ளிகள்)

**7. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப் பற்றி ஆறு (6) சொல்லியங்கள் எழுதுக.**

1. கல்வியின் சிறப்பு
2. திருகோணமலை
3. அங்காடி

(6X2=12 புள்ளிகள்)

## பகுதி – 2

**1. பந்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறந்து நல்லறிவைக் கொடுப்பது பள்ளியாகும். பள்ளியில் மாணவர்கள் அறிவை மட்டுமன்றி பொதுச்சொத்துகளைப் பாதுகாத்தல், பிறருக்கு உதவுதல் போன்ற நற்பண்புகளையும் கற்றுக் கொள்கின்றனர். மாணவர்களுக்குப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர் குரு என்றும் போற்றப்படுகின்றார். மாணவர்களுடைய எதிர்கால வாழ்வுக்கு ஆசிரியர்கள் நல்ல வழிகாட்டியாக இருக்கின்றார்கள். 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' என்று நீதிநூல்கள் கூறுகின்றன. மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகியோரை மாணவர்களாகிய நாம் என்றும் மதித்து நடந்து கொள்ளுதல் அகத்தியமானதாகும்.

1. மாணவர்களுக்குப் பள்ளி எதைக் கொடுக்கின்றது?

   ______________________________________________

2. ஆசிரியர் எவ்வாறு போற்றப்படுகின்றார்?

   ______________________________________________

3. பள்ளியில் மாணவர்கள் கற்றுக்கொள்ளும் நற்பண்புகள் இரண்டு எழுதுக.

   ______________________________________________

4. மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பவர் யார்?

   ______________________________________________

5. நாம் மதித்து நடக்க வேண்டியவர்கள் யாவர்?

   ______________________________________________

(5X2=10 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள ஒரு நாளுக்கான செயற்பாட்டைப் படித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

**மாறனின் சனிக்கிழமைச் செயற்பாடு**

| நேரம் | செயற்பாடு |
|---|---|
| 08:00 – 08:30 | காலை உணவு |
| 09:00 – 12:00 | தமிழ்ப்பள்ளி |
| 12:30 – 13:30 | மதிய உணவு |
| 16:00 – 17:30 | உடற்பயிற்சி |
| 18:30 – 19:30 | அக்காவுடன் வீட்டில் இசைப்பயிற்சி |
| 20:00 – 20:30 | குடும்பத்தினருடன் இரவு உணவு |
| 21:00 | படுக்கைக்குச் செல்லல் |

1. மாறன் சனிக்கிழமைகளில் தமிழ்ப்பள்ளிக்குச் செல்வான். ( )
2. அவன் குடும்பத்தினருடன் இரவு உணவு உண்பான். ( )
3. மாறன் 16:00 – 17:30 மணிவரை உடற்பயிற்சி செய்வான். ( )
4. 18:30 மணிக்கு நண்பர்களுடன் சேர்ந்து வெளியில் விளையாடுவான். ( )
5. 21:00 மணிக்கு வீட்டில் இசைப்பயிற்சி செய்வான். ( )

(5X1=5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 15 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 05 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 06 | | | |
| 6 | 12 | | | |
| 7 | 12 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |